



# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்
மானியக் கோரிக்கை எண்.3

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
மானியக் கோரிக்கை எண்.24

## சட்டத் துறை
மானியக் கோரிக்கை எண்.33

அறிவிப்புகள்
2024-2025

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்
மானியக் கோரிக்கை எண்.3

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
மானியக் கோரிக்கை எண்.24

## சட்டத் துறை
மானியக் கோரிக்கை எண்.33

அறிவிப்புகள்
2024-2025


**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

# நீதி நிருவாகம்

அறிவிப்புகள்
2024-2025

## 1. திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

**Constitution of a new District Munsif-cum-Judicial Magistrate Court at Gujiliamparai in Dindigul District.**

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை, நடுவர் நீதிமன்றம் தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.



## 2. கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

**Constitution of a new District Munsif-cum-Judicial Magistrate Court at Chinnasalem in Kallakurichi District.**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.

3 கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

**Constitution of a new District Munsif-cum-Judicial Magistrate Court at Killiyoor in Kanniyakumari District.**

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.



4. புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தைப் பிரித்து தனித்தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் ஒரு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றமும் அமைத்தல்.

**Constitution of a separate District Munsif Court and a separate Judicial Magistrate Court at Thirumayam in Pudukkottai District, by bifurcating the existing District Munsif-cum-Judicial Magistrate Court.**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தைப் பிரித்து தனித்தனியே ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் ஒரு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றமும், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்காக, போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, திருநெல்வேலியில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைத்தல்.

**Constitution of one Special Court at Tirunelveli for the cluster of Districts of Tirunelveli, Tenkasi, Thoothukudi and Kanniyakumari for exclusive trial of cases under the Narcotic Drugs and Psychotropic Substances Act, 1985.**

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்காக, **போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன்கீழ் பதிவு** செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, திருநெல்வேலியில் மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.



6. கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் ஒரு கூடுதல் குடும்பநல நீதிமன்றம் அமைத்தல்.

**Constitution of an Additional Family Court at Padmanabhapuram in Kanniyakumari District.**

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு குடும்பநல நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

## 7. மதுரை மாவட்டம் மதுரையில் ஒரு கூடுதல் குடும்பநல நீதிமன்றம் அமைத்தல்.

## Constitution of an Additional Family Court at Madurai in Madurai District.

மதுரை மாவட்டம் மதுரையில் ஒரு குடும்பநல நீதிமன்றம், மாவட்ட நீதிபதி தரத்தில் தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.



## 8. அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955-இன் கீழ் நுகர்ப்பொருள், குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

## Constitution of a Special Metropolitan Magistrate Court in Chennai for trial of Civil Supplies, C.I.D. cases under the Essential Commodities Act, 1955.

அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955-இன் கீழ் நுகர்ப்பொருள், குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க, முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் ஒரு சிறப்பு பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சென்னையில் அமைக்கப்படும்.

9. 1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, செங்கல்பட்டில் ஒரு விரைவு நீதிமன்றம் அமைத்தல்.

**Constitution of a Fast Track Court at Chengalpattu for exclusive trial of cases filed under Negotiable Instruments Act, 1881.**

1881 - ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, நீதித்துறை நடுவர் தரத்திலான ஒரு விரைவு நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் செங்கல்பட்டில் அமைக்கப்படும்.



10. சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையின் பயன்பாட்டிற்காக மின்கலத்தால் (Battery) இயங்கக்கூடிய நான்கு சக்கர வாகனங்கள் தலா இரண்டு வீதம், 4 வாகனங்கள் ரூபாய். 27.72 இலட்சம் செலவினத்தில் வாங்குதல்.

**Purchase of 4 Battery operated cars, i.e., two each to the Principal seat of the Madras High Court and Madurai Bench of Madras High court, Madurai at a total cost of Rs. 27.72 lakhs.**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையின் பயன்பாட்டிற்காக மின்கலத்தால் (Battery) இயங்கக்கூடிய நான்கு சக்கர வாகனங்கள் தலா இரண்டு வீதம், 4 வாகனங்கள் ரூபாய் 27.72 இலட்சம் செலவினத்தில் வாங்கப்படும்.

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

## அறிவிப்புகள்
## 2024-2025

## 1. திருச்சிராப்பள்ளியில், மாநில சீர்திருத்த நிருவாகப் பயிற்சி நிறுவனம் அமைத்தல்

**Establishment of State Institute of Correctional Administration (SICA) at Tiruchirappalli.**

சிறை களப்பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் அளிப்பதற்காக, வேலூரில் செயல்பட்டு வரும் சிறைக் காவலர் பயிற்சி மையம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டு, மாநில சீர்திருத்த நிருவாகப் பயிற்சி நிறுவனமாக அமைக்கப்படும்.



## 2. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதியதாக மாவட்ட சிறைச்சாலை அமைத்தல்.

**Establishment of new District Jail in Thanjavur District.**

தஞ்சாவூர் மாவட்டம், திருமலை சமுத்திரத்தில், 500 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் புதியதாக மாவட்ட சிறைச்சாலை அமைக்கப்படும். அதற்கான புதிய கட்டடம் கட்டப்படும்.

3. மத்திய சிறை-II, புழலில் கூடுதலாக 1000 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் கூடுதல் தளம் கட்டுதல்

**Construction of Additional floor to accommodate 1000 more Prisoners at Central Prison-II, Puzhal.**

மத்திய சிறை-II, புழலில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்காக 1000 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் கூடுதல் தளம் கட்டப்படும். இதன் மூலம் இடநெருக்கடி குறைக்கப்படும்.



4. 9 மத்திய சிறைகள் மற்றும் புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச்சிறைகளில் காட்சிப் பலகையுடன் கூடிய பொது தகவல் அறிவிப்பு அமைப்பு நிறுவுதல்.

**Installation of Public Address System with Electronic display in 9 Central Prisons and 3 Special Prisons for Women at Puzhal, Vellore and Tiruchirappalli.**

9 மத்திய சிறைகள் மற்றும் புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளில், சிறைவாசிகளுக்கான நேர்காணல், நீதிமன்ற வழக்கு ஒத்திவைப்பு போன்ற தகவல்களை அறிவிப்பதற்காக காட்சிப் பலகையுடன் கூடிய, பொது தகவல் அறிவிப்பு அமைப்பு இரண்டு கட்டங்களாக ரூபாய் 751.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

5. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், பூவிருந்தவல்லி தனி கிளைச்சிறை மற்றும் சிறைத்துறை தலைமையகம் ஆகிய இடங்களில் 160 காணொலி காட்சியமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

**Provision of 160 Video Conferencing facilities in 9 Central Prisons, 5 Special Prisons for Women, 14 District Jails, Special Sub Jail, Poonamallee and Prison Headquarters.**

சிறைவாசிகளை நீதிமன்றங்களில் நேரடியாக முன்னிலைப்படுத்தாமல் காவல் நீட்டிப்புச் செய்யவும், வழக்கு விசாரணைகளை நடத்தவும், 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், பூவிருந்தவல்லி தனி கிளைச்சிறை மற்றும் சிறைத்துறை தலைமையகம் ஆகிய இடங்களில் 160 காணொலி காட்சியமைப்பு வசதிகள் ரூபாய் 650.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.



6. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகளில் குழந்தை நேய நேர்காணல் அறைகளை அமைத்தல்

**Child friendly Interview Rooms will be established in 9 Central Prisons and 5 Special Prisons for Women.**

சிறைவாசிகள் தங்கள் குழந்தைகளை அருகில் சந்திக்க ஏதுவாக குழந்தை நேய நேர்காணல் அறைகள் 9 மத்திய சிறைகள் மற்றும் 5 பெண்கள் தனிச் சிறைகளில் அமைக்கப்படும்.

7. 9 மத்திய சிறைகளுக்கு வெளிச்சுற்று பாதுகாப்பிற்காக சுற்றுக் காவல் வாகனம் வழங்குதல்.

**Provision of one vehicle each to the 9 Central Prisons for outer periphery wall patrolling.**

9 மத்திய சிறைகளின் பாதுகாப்பை வலுப்படுத்திடும் வகையில், வெளிச்சுற்று பாதுகாப்பிற்காக தலா ஒரு வாகனம் வீதம், 9 சுற்றுக்காவல் வாகனங்கள் ரூபாய் 81.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



8. மத்திய சிறை, வேலூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மத்திய சிறை-II, புழல் ஆகிய சிறைகளுக்கு புதிய அவசரகால ஊர்தி வழங்குதல்.

**New Ambulances will be provided to Central Prisons at Vellore, Coimbatore, Cuddalore and Central Prison-II, Puzhal.**

அவசர சிகிச்சைத் தேவைப்படும் சிறைவாசிகளை வெளி மருத்துவ மனைகளுக்கு கொண்டு செல்வதற்காக, மத்திய சிறை, வேலூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மத்திய சிறை-II, புழல் ஆகிய சிறைகளுக்கு ரூபாய் 74.00 இலட்சம் செலவில் 4 புதிய அவசரகால ஊர்திகள் வழங்கப்படும்.

## 9. புழல் மத்திய சிறை வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய, பார்வையாளர் காத்திருப்புக் கூடம் கட்டுதல்

**Construction of Waiting Hall with all facilities for visitors at Central Prison complex, Puzhal**

சிறைவாசிகளைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் வசதிக்காக, புழல் மத்திய சிறை வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய, பார்வையாளர் காத்திருப்புக் கூடம் கட்டப்படும்.



## 10. 9 மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு, 50 உடலோடு அணியும் புகைப்படக் கருவிகள் வழங்குதல்

**Provision of 50 Body Worn Cameras for 9 Central Prisons and District Jail, Pudukkottai**

சிறைவாசிகளின் நடமாட்டத்தினை கண்காணித்திடவும், அசம்பாவித சம்பவங்களை தடுத்திடவும், 9 மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு, 50 உடலோடு அணியும் புகைப்படக் கருவிகள் ரூபாய் 35.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

11. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள் மற்றும் தனி கிளைச்சிறை, பூவிருந்தவல்லி ஆகிய சிறைகளுக்கு, கையடக்க உலோகம் கண்டுபிடிக்கும் கருவிகள் வழங்குதல்.

**Provision of 90 Nos of Hand Held Metal Detectors for 9 Central Prisons, 5 Special Prisons for Women, 14 District Jails and Special Sub Jail, Poonamallee.**

சிறைகளுக்கு வரும் நபர்கள் மறைத்து கொண்டு வரும் தடை செய்யப்பட்ட கைபேசி உள்ளிட்ட உலோகப் பொருட்களை சோதனை செய்து கண்டுபிடிக்கும் வகையில், 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள் மற்றும் தனி கிளைச்சிறை, பூவிருந்தவல்லி ஆகிய சிறைகளுக்கு, கையடக்க உலோகம் கண்டுபிடிக்கும் கருவிகள் ரூபாய் 18.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

# சட்டத்துறை

## அறிவிப்புகள்
## 2024-2025

1. பட்டறைப்பெரும்புதூர் மற்றும் புதுப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் அரசு சட்டக்கல்லூரிகளில் முறையே 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப் படிப்புகள் 2024 - 2025 - ஆம் கல்வியாண்டு முதல் தொடங்குதல்.

**Starting of 5 year and 3 year Law Degree courses in the Pattaraiperumbudur and Pudupakkam Government Law Colleges respectively from the Academic year 2024-2025.**

பட்டறைப்பெரும்புதூரில் செயல்பட்டு வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக 5 ஆண்டு சட்டப் படிப்பும், புதுப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக 3 ஆண்டு சட்டப் படிப்பும் 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.



2. ஆறு அரசு சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப்படிப்புகளில் தலா 40 மாணவர்கள் வீதம் மொத்தம் 480 மாணவர்களை கூடுதலாக அனுமதித்தல்.

**Sanctioning of admission of 40 additional students each in 5 year and 3 year Law degree courses in six Government Law Colleges.**

வேலூர், விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், தேனி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் முதலாமாண்டு சேர்க்கை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 80-லிருந்து 120-ஆக அதிகரிக்கப்படும். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 3 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்களும், 5 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்களும் ஆக மொத்தம் 480 மாணவர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதலாக அனுமதிக்கப்படுவர்.

3. அரசு சட்டக் கல்லூரி "மாணவர்கள் வள மேலாண்மைத் திட்டம்" உருவாக்குதல்.

**Launching of "Students Enterprise Resource Planning" module.**

தமிழ்நாட்டிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் தலைமைச் செயலகம் மற்றும் சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகத்துடன் முழுமையாக இணைக்கும் வகையில் "மாணவர்கள் வள மேலாண்மைத் திட்டம்" (Enterprise Resource Planning) ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு இலட்சம்) செலவில் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படும்.



4. அரசு சட்டக் கல்லூரி மாணவர்களின் தொழில்முறை திறன் மேம்படுத்தும் வகையில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் "பயிற்சி பேராசிரியர்" (Professor of Practice) என்ற சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்துதல்.

**Launching a Special Program of "Professor of Practice" to enhance the professional skill of students of all Government Law Colleges.**

அரசு சட்டக் கல்லூரி மாணவர்களின் தொழில்முறை திறனை மேம்படுத்தும் வகையில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் ஓய்வுபெற்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் சட்டப் பணிகளில் 15 ஆண்டுகள் அனுபவம் பெற்ற சட்ட வல்லுநர்கள் மூலம் "பயிற்சி பேராசிரியர்" (Professor of Practice) என்ற சிறப்புத் திட்டம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 72,00,000/- (ரூபாய் எழுபத்திரண்டு இலட்சம்) செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நிதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

5. அரசு சட்டக் கல்லூரிகளில் 'சட்டத்தமிழ்' எனும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்துதல்.

**Introducing of new subject namely, "Satta Tamil" in the Government Law Colleges.**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்ற அரசு சட்டக் கல்லூரிகளில் 2024 - 2025-ஆம் கல்வியாண்டு முதல் 'சட்டத்தமிழ்' எனும் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.



6. சீர்மிகு சட்டப்பள்ளியில் புதிதாக இரண்டு முதுகலை சட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்துதல்.

**Introducing two new Post Graduate Law Degree Courses in the School of Excellence in law.**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியில் 'சொத்துரிமைச் சட்டம்' மற்றும் 'குற்றம் மற்றும் தடயவியல் சட்டம்' ஆகிய இரு முதுகலை சட்டப்படிப்புகள் 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக அறிமுகப்படுத்தப்படும்.

## 7. சீர்மிகு சட்டப்பள்ளியில் "மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டம்" செயற்படுத்தப்படும்.

**Establishing the "Student and Faculty Exchange Program" in School of Excellence in Law.**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் உள்ள சீர்மிகு சட்டப் பள்ளியில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் "மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டம்" ரூ. 3 கோடி செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நிதியிலிருந்து செயற்படுத்தப்படும்.



## 8. சீர்மிகு சட்டப்பள்ளி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுதல்.

**Constructing of Men's Hostel Building for the students of School of Excellence in Law.**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 3505.5 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ. 21.56 கோடி மதிப்பீட்டில் மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும். இத்திட்டம் 50% அரசு நிதி பங்களிப்பு மற்றும் 50% பல்கலைக்கழக நிதி பங்களிப்பு மூலம் செயற்படுத்தப்படும்.

எஸ். ரகுபதி
சட்டத்துறை அமைச்சர்